This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# காயத்ரி

www.writersujatha.com

## 1

காயத்ரியைச் சந்திக்கும் முன்–சென்னைக்கு வரும் போதெல்லாம் நான் மூர்மார்க்கெட் செல்வேன். அங்கே ஒரு 'பாய்' எனக்குப் பரிச்சயம். பழைய புத்தகக் கடை பாய். எத்தனைதான் மக்களிடையே இலக்கிய உணர்வும் மறுமலர்ச்சியும் விழிப்பும் இருந்தாலும் பணத் தேவை என்று ஒன்று இருக்கிறதே. எனவே மூர்மார்கெட்டில் சில அபூர்வ இலக்கியங்கள் எனக்குக் கிடைக்கும். நான் இந்தத் தடவை மூர் வந்தது, ஒரு பிரபல வாரப் பத்திரிகையின் இரண்டு வருஷப் பழைய ஒரு இதழுக்காக. அதில் என் கதை வந்திருந்தது. புத்தகமாக வெளியிடுகையில் விட்டுப்போய்விட்டது. எனவே மூர்மார்கெட் பாய் அந்தப் பத்திரிகை அடுக்கை என் முன் தள்ளி, 'பொறுக்கிக்கிங்க அய்யரே' என்றான். தேதி வாரியாக இல்லாத ஐந்து வருஷச் சரக்கில் ஒரு வருஷத்தின் ஒரு மாதத்தின் ஒரு வாரத்தைத் தேடுவது ஏறக்குறைய இயலாத காரியம். முயற்சியைக் கைவிடுகிற சமயம் அந்தப் பத்திரிகைகளின் நடுவே அந்த நீல நிற நோட்டுப் புத்தகம் தலை காண்பித்தது. நூறு பக்க நோட்டு பைண்டு பண்ணி இருந்தது. அதை திறந்ததும்–

அவசரம்!

அவசியம்!

என்று சிவப்பில் இரண்டு வார்த்தைகளைப் பார்த்துத் திடுக்கிட்டேன். அதன் கீழ் திருக்குறள் போல் இரண்டு வரிகள்–

அவசியம் நீங்கள் இதைப் படிக்கவேண்டியது.

அவசரம் நீங்கள் உடனே வரவேண்டியது.

புரட்டினேன்.

காயத்ரி ராஜரத்னம் 18–1–76

www.writersujatha.com

புரட்டினேன்.

சின்னச் சின்ன நெருக்கமான கையெழுத்து. பெண்மை நிச்சயம் தெரியும், மல்லாந்த, சற்று இடதுபக்கம் சாய்ந்த கையெழுத்து. ஆரம்பப் பக்கங்கள் ஸ்பஷ்டமாக இருந்தன. போகப் போக எழுத்து குளறிக்கொண்டே வந்தது. கடைசியில் ரொம்ப மோசம்.

"என்ன! கிடைச்சுதா அய்யரே?"

"இல்லே பாய். வேறு ஏதோ கிடைக்குது."

"இன்னாது தொடர் கதையா? பைண்டு பண்ணதா?"